இந்தியிலும் இருக்குமென்று சொல்வது அந்த விடை எழுதுகிறவர்களுக்கு உரிய முழு உரிமையைத் தந்ததாக ஆகாது என்ற அடிப்படையில் நம்முடைய மொழியில், தமிழ் மொழியில் வினாத் தாள்கள் அளிக்கவேண்டுமென்ற கருத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது. அதை இந்த அரசு வலியுறுத்தும்.

விருதுபெறும் ஆசிரியர்களுக்குப் பயணப்படி

* வினா எண். 324— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்; மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நல்லாசிரியர் விருதுபெறுகின்ற ஆசிரியர்கள் அவ்விருதைப் பெறுவதற்குச் சென்னை வந்து செல்வதற்கு வழங்கப்படும் பயணப்படி தமிழ்நாடு பயணப்படி விதியின்படி வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இல்லை. அவர்களுக்கு அதற்கான தனி அரசாணைக்கேற்ப வழங்கப் படுகிறது. இரெயில் மார்க்கமாக வருகிறவர்களுக்கு இரண்டாவது வகுப்பு கட்டணமும், இரவில் பயணம் செய்பவர்களாகில் படுக்கைக் கட்டணம் உட்படவும் பேருந்தில் வருகிறபவர்களாயின் அதற்குள்ள கட்டணமும் பயணப்படியாக வழங்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் மொத்தபடியாக ரூ. 12-ம் தரப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்லாசிரியர் விருது பெற்றவர்களுக்கு இரண்டாவது வகுப்புப் பயணப்படியும் 12 ரூபாய் படியாகவும் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதே நல்லாசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பள்ளித் தேர்வின்போது பேப்பர் திருத்துவதற்காக வந்தால் அவர்களுக்கு முதல் வகுப்புக் கட்டணமும் நாளொன்றுக்கு 8 ரூபாய் வீதமும் 6 நாளைக்குப் படியும் அளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் நல்லாசிரியர்கள் விருது பெற்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஏற்கெனவே பெற்றுவந்த படியைக் கூட பெறமுடியாமல் இருப்பதும் இப்போது கொடுப்பது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது என்ற நிலையும் இருப்பதால் அதைத் திருத்தியமைத்து முன்னாலே கொடுத்ததுபோலக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அவர்களுக்கு முதல் வகுப்புக் கட்டணம் தரப்படவேண்டுமென்ற யோசனையை இந்த அரசு பரிசீலிக்கும்.

1979 மார்ச் 10]

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, இந்த நல் ஆசிரியர்கள் விருதுகள் எந்த ஆண்டிலேயிருந்து அவர்களுக்கு வழங்கப்படுகின்றன? இதுவரையில் எத்தனை பேர்களுக்கு நல்லாசிரியர்கள் . விருது வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, 1960 முதல் கல்வித் துறையில் சிறந்த பணியாற்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது வழங்கும் திட்டத்தை அரசு அமுலாக்கியது. இத்திட்டம் 1970-லிருந்து உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், அதன் பின் 1972-லிருந்து ஆங்கிலோ இந்தியப் பள்ளி ஆசிரியர்களுக்கும் இத்திட்டம் பரவலாக்கப் பட்டது. இதனை மெட்ரிக்குலேஷன் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொண்டுவரும் குறிப்பொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுவரையில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டது என்ற விவரம் இங்கே தரப்படவில்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நல்லாசிரியர்கள் விருது, ஸ்டேட் அவார்ட் என்றும் நேஷனல் அவார்ட் என்றும் இரண்டு இருக்கிறது. அதைப் பெறுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு சென்னை மாநகராட்சியிலே சிவிக் ரிசப்ஷன் என்ற முறையிலே நகராட்சி வரவேற்பு அளித்து அவர்களை ஊக்குவிக்கின்ற முறை உண்டா? அதைப்போலவே அவர்களை அரசின் சார்பிலே சிறப்புவிருந்தினர்களாக அழைத்து பெருமைப்படுத்துகின்ற வாய்ப்பை இந்த அரசு உருவாக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அவர்களைச் சிறப்புச் செய்கின்ற வகையிலே தான் சென்னைக்கு அவர்களை வரவழைத்து விழா நடத்தி அந்த விருதைத் தருகிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அந்த நல்லாசிரியர்களுக்கு இதுவரை கொடுத்து வந்த இரண்டாவது வகுப்புக் கட்டணத்தை முதல் வகுப்பு கட்டணமாகத் தருவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சீக்கிரத்திலே பரிசீலனை செய்து முடிவு எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று ஆசிரியர்களுக்கு சாப்பாட்டுப்படி ஏற்கனவே கொடுக்கப்பட்டது இப்போது இதிலே கொடுக்கப்படுவதில்லை, ஆகவே அதையும் முன்னைப்போலவே கிடைக்கச் செய்வதற்கு அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது குறித்துப் பரிசீலிக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை.